## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

**முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,**
**மாவட்ட நீதிபதி**

**2026–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 05–ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 வைகாசித் திங்கள் 22–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண். 193/2015 –ல்**
**வழக்கிடை விண்ணப்ப எண் 09/2026**

**V.G.அருண்** ...**மனுதாரர்/10–ஆம் பிரதிவாதி**

**–எதிர்–**

**01. குப்பாயி**
**02. பாக்கியம்**
**03. பெரியம்மாள்**
**04. பாப்பாத்தி**
**05. போதம்மாள்**
**06. பெரியசாமி**
**07. சின்னசாமி**
**08. பூங்கொடி** ...**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனுவில் மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு.K.S.முகமது மொஹிதீன்** அவர்களும் 01-ஆம், 05 முதல் 07, 08-ஆம் எதிர்மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு.K.M.ஜெயபால்** அவர்களும் தோன்றினர். பிற எதிர்மனுதாரர்கள் முதலேற்பு வழக்கிலே தோன்றாத்தரப்பினரான நிலையில் இந்த மனு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர், 01-ஆம், 05 முதல் 07, 08-ஆம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்வைத்த வாதங்களை கவனத்தில் வைத்தும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையிலிருந்த இந்த மனுவில் இன்று இந் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கிறது.

### ஆணையுரை

**முகவுரை**

எதிர்வழக்குரையுடன் தாக்கல்செய்யப்படா ஆவணங்களை வழக்கு விசாரணையின்போது பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தில் சான்றாக தாக்கல் செய்வதற்கு நீதிமன்றத்தின் அனுமதி கோரி உரிமையியல் நடைமுறைத்

IIIrd ADJ Court, Salem

தொகுப்புச் சட்டத்தின் 08-ஆம் வகுமுறையின் 1A(3)-ஆம் விதியின்கீழ் மனுதாரர்/10 ஆம் பிரதிவாதியால் இந்த மனு தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

## மனுவின் சுருக்கம்

01. மனுதாரர் முதலேற்பு வழக்கில் 10-ஆம் பிரதிவாதி ஆவார். எதிர்மனுதாரர்கள்/வாதிகள் பாகப்பிரிவினை நிவாரணங் கோரியும் இதர நிவாரணங்கள் கோரியும் முதலேற்பு வழக்கைத் தாக்கல்செய்துள்ளனர். எதிர்மனுதாரர்கள்/வாதிகளின் வழக்கை மறுத்து மனுதாரர்/10-ஆம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல்செய்துள்ளார்.

02. மனுதாரர்/10-ஆம் பிரதிவாதி அவருடைய பழைய ஆவண கோப்புகளில் இருந்து சில சான்றொப்பமிட்ட ஆவணங்களை தற்போதுதான் கண்டுபிடித்து எடுத்தார். அவை மனுதாரர்/10-ஆம் பிரதிவாதியின் எதிர்வாதத்தை நிரூபிக்க அவசியம். அந்த ஆவணங்களை பிரதிவாதி தரப்புச் சான்றாவணங்களாக குறியீடுச்செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆகையால், அவற்றைத் தாக்கல்செய்ய அனுமதி வழங்க வேண்டும்.

## எதிருரையின் சுருக்கம்

03. மனுவில் கண்டுள்ள சங்கதிகள் யாவும் பொய்யானவை. இந்த மனுவுடன் தாக்கல்செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் இந்த வழக்கை முடிவு செய்வதற்கு தொடர்பற்றவை. வழக்கு நடவடிக்கைகளை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த மனு தாக்கல்செய்யப்பட்டுள்ளது. ஆகையால், இந்த மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடிச் செய்ய வேண்டும்.

III rd ADJ Court, Salem

**தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்**

04. **இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?**

**தீர்முடிவு**

05. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. பிரதிவாதியின் எதிர்வாதத்திற்கு அடிப்படையாக அவர் நம்பும் ஆவணத்தை எதிர்வழக்குரையுடன் தாக்கல்செய்ய வேண்டும் என்றும் அத்தகைய ஆவணம் அவருடைய கட்டுப்பாட்டிலில்லை என்றால் அது எங்கு யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளது என்று எதிர்வழக்குரையில் குறிப்பிட வேண்டும் என்றும் உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 08-ஆம் வகுமுறையின் 1A(1), 1A(2) ஆகிய விதிகள் வலியுறுத்துகின்றன. மேற்சொன்ன இரு விதிகளின்கீழ் குறிப்பாக 01-ஆம் விதியின்கீழ் தாக்கல்செய்யப்பட வேண்டிய ஆவணங்களை பிரதிவாதி தாக்கல்செய்யாவிடின் பின்னிட்டு நீதிமன்றத்தின் அனுமதியின்றி வழக்கு விசாரணையின்போது முன்னிட முடியாது என்று 1A(3)-ஆம் விதி வகுத்து உரைக்கிறது.

06. எதிர்வழக்குரையுடன் தாக்கல்செய்யப்படாத அல்லது யாருடைய உடைமையில் இருக்கிறது என்று குறிப்பிடாத ஆவணங்களை வழக்கு விசாரணையின்போது தாக்கல்செய்வதற்கு நீதிமன்றத்தின் அனுமதி கோரி தாக்கல்செய்யப்படும் விண்ணப்பங்களில் ஏன் அந்த ஆவணங்களை எதிர்வழக்குரையுடன் தாக்கல்செய்ய முடியவில்லை? அச் சமயத்தில் அந்த ஆவணங்கள் யாருடைய உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் இருந்தன

IIIrd ADJ Court, Salem

என்று ஏன் குறிப்பிட முடியவில்லை என்பதற்கான காரணங்கள் மனுவில் சொல்லப்பட வேண்டும்.

07. சேலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற முதலேற்பு வழக்கு எண் 2629/1981 சம்மந்தப்பட்ட ஆவணம், பெரியதம்பி கவுண்டர், பரமசிவம் ஆகிய இருவர் பெயரில் 13.02.1985-ஆம் தேதியிட்ட விற்பனை பத்திரத்தின் அசல், மேற்சொன்னவர்களுக்கு இடையே ஏற்பட்ட 01.07.2004 ஆம் தேதியிட்டப் பாகப்பிரிவினைப் பத்திரத்தின் அசல், வேலாயுதம் என்பவருக்கு 01 முதல் 07 வரையிலான பிரதிவாதிகள் நிறைவேற்றிக் கொடுத்த 16.10.2007-ஆம் தேதியிட்ட பகர அதிகாரப் பத்திரத்தின் அசல், பகர அதிகார முகவர் என்ற நிலையில் வேலாயுதம் பெயரில் ஏற்பட்ட 07.11.2007-ஆம் தேதியிட்ட கிரயப் பத்திரத்தின் அசல், சேலம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற முதலேற்பு வழக்கு எண் 1031/2007-ல் வழக்கிடை விண்ணப்ப எண் 1589/2009-இல் பிறப்பிக்கப்பட்ட ஆணையின் சான்றிட்ட நகல், மேற்சொன்ன முதலேற்பு வழக்கில் 07.10.2010-ஆம் தேதி யன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை, 1417-ஆம் பசலிக்கான வழக்குச் சொத்து சம்மந்தமான அடங்கல் கணக்கின் சான்றிட்ட நகல் ஆகியவற்றை வழக்கு விசாரணையில் சான்றாவணமாக தாக்கல்செய்வதற்காக நீதிமன்றத்தின் அனுமதியை மனுதாரர்/10-ஆம் பிரதிவாதி கோருகிறார். மேற்சொன்ன ஆவணங்களில் 06-ஆம், 07-ஆம் ஆவணங்களைத் தவிர மற்றவை சம்மந்தமாக மனுதாரர்/10-ஆம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு அதுச் சம்மந்தமான எதிர்வாதமும் முன்வைத்துள்ளார். ஆனால் அவற்றை எதிர்வழக்குரையுடன் தாக்கல்செய்யவில்லை. அச் சமயத்தில்

III rd ADJ Court, Salem

அந்த ஆவணம் தன்னிடம் இருந்ததா? இல்லையா? அல்லது வேறு எங்கு இருந்தது என்பது சம்மந்தமாக எதுவும் குறிப்பிடப்படவில்லை.

08. மேற்சொன்ன ஆவணங்களை ஏன் எதிர்வழக்குரையுடன் தாக்கல்செய்யவில்லை அல்லது அந்த ஆவணங்கள் எங்கு அல்லது யாருடைய கட்டுப்பாட்டில் இருந்தன என்பது சம்மந்தமாகவும் தற்போது எப்படி? எப்போது? கிடைத்தன என்பது சம்மந்தமாகவும் இந்த மனுவில் எதுவும் கூறப்படவில்லை. பழைய ஆவண கட்டுக்களை தேடியபோது தற்போதுதான் கிடைத்தது என்று வெறுமனே சொல்லியிருப்பது போதுமான காரணமாக இந் நீதிமன்றம் கருதவில்லை. வழக்கு விசாரணையின்போது ஆவணங்களை நீதிமன்றத்தின் அனுமதி பெற்றுத் தாக்கல்செய்ய முடியும் என்ற சட்ட வகையம் உள்ளதாலே ஆவணங்களை வாதுரைகளுடன் தாக்கல்செய்யாமல் தரப்பினர் தன்னகத்தே வைத்துக்கொண்டு அவர்கள் விருப்பம்போல் வழக்கு விசாரணையின்போது தாக்கல்செய்வதை ஊக்கு - விக்க மேற்சொன்ன சட்ட வகையம் புகுத்தப்படவில்லை. தவிர்க்க முடியாத காரணங்களால் வாதுரைகளுடன் தாக்கல்செய்ய முடியாத ஆவணங்களை வழக்கு விசாரணையின்போது தாக்கல் செய்ய அனுமதிப்பதற்கே அந்த வகையம் புகுத்தப்பட்டிருக்கிறது.

09. மேற்சொன்ன சட்ட வகையம் உள்ளது என்பதாலேயே உரிய காரணங்கள் எதுவும் சொல்லப்படாமல் வெறும் சம்பிரதாய முறையில் மனுதாரர் இந்த மனுவை தாக்கல்செய்திருக்கிறார்.

10. மேலே விவாதிக்கப்பட்டது ஒரு புறம் இருக்கட்டும். மேற்சொன்ன ஆவணங்கள் இந்த வழக்கை அறுதியாக முடிவுசெய்ய அவசியமாக

IIIrd ADJ Court, Salem

உள்ளன என்பதாலும் மேற்சொன்ன ஆவணங்கள் குறித்த சங்கதிகள் எதிர்வழக்குரையில் ஏற்கனவே குறிப்பட்டிருப்பதால் தற்போது அந்த ஆவணங்களை தாக்கல்செய்ய மனுதாரர்/10-ஆம் பிரதிவாதிக்கு அனுமதி வழங்குவதால் எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு எவ்வித அநீதியும் விளையாது என்பதாலும் இந்த மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந் நீதிமன்றம் கருதுகிறது.

11. இருப்பினும் உரிய காலத்தில் ஆவணங்களை தாக்கல்செய்யாத மனுதாரர்/10-ஆம் பிரதிவாதியின் அலட்சியப்போக்கை எச்சரிக்கும் விதமாக 500/- உரூபாயை செலவுத்தொகையாக விதித்து இந் நீதிமன்றம் ஆணையிடுகிறது.

## இறுதிமுடிவு

12. இறுதியாக, மனுதாரர்/10-ஆம்பிரதிவாதி அவர் தரப்பு சாட்சியத்தின்போது 500/- உரூபாயை செலவுத்தொகையாக எதிர்மனு - தாரர்கள்/வாதிகளுக்கு செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை விதித்து இந்த மனு அனுமதிக்கப்படுகிறது.

**இந்த ஆணையுரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஜூன்திங்கள் 05–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

PUGAZHENTHI V

Digitally signed by PUGAZHENTHI V
Date: 2026.06.05 18:58:53 +0530

**மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிபதி,**

**சேலம்.**